(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 40.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 யூலை 25 வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

கௌரவ கபில அதுகோரல

கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லசஷ்மன் கிரிஎல்ல

கௌரவ சட்டத்தரணி உதயன கிரிந்திகொட

கௌரவ கே. எஸ். குகதாசன்

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ வீரசேன கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ வடிவேல் சுரேஷ்

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திரு. சமிந்த குலரத்ன, பதில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் கொழும்பு இன்டர்நெசனல் கென்ரேனர் டேர்மினல் லிமிட்டெட் தொடர்பில் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 மே 03 ஆம் திகதிய 2382/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளையை அரச நிதிக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா சார்பாக, அதன் உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சீ. தொலவத்த அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பொருளாதார நிலைமாற்றம் பற்றிய சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால் குறிப்பிட்ட விசேட குழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை 102 ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2024 செப்தெம்பர் மாதம் 27 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல:1):** "(464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன பிரேரிக்க கௌரவ புத்திக பத்திறண அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி ( இல:2 ) :** "இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சீ. தொலவத்த பிரேரிக்க கௌரவ நாலக பண்டார கோட்டேகொட அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. பகிரங்க நிதிசார் முகாமைத்துவம் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

"கௌரவ வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்குவாராக" என பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.08 மணிக்கு கௌரவ வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்கினார்.)

"கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிபிடிய தலைமை தாங்குவாராக" என நிதி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 12.09 மணிக்கு கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிபிடிய தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதி தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிபிடிய தலைமை தாங்குவாராக" என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.02 மணிக்கு கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிபிடிய தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஜகத் சமரவிக்கிரம தலைமை தாங்குவாராக" என கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.23 மணிக்கு கௌரவ ஜகத் சமரவிக்கிரம தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.03 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 மற்றும் 2 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

3 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 8 முதல் 12 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஆ) இச்சட்டத்தின் பாகம் VI இல் குறிப்பீடு செய்யப்பட்ட பிரதான கணக்கீட்டு அலுவலர், கணக்கீட்டு அலுவலர் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி உட்பட இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் தத்துவத்தை அல்லது கடமையை அளிக்கப்பட்ட, கையளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்டவரான அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஊ) அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமைய, அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 16 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"துள்ளமை எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின் கீழ்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 முதல் 31 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

32 ஆம் வாசகம்

32 ஆம் பக்கத்தில் 1 முதல் 9 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(3) தேசிய பெறுகை ஆணைக்குழு அவசியமெனக் கருதின், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றுக்கு குறித்த வழிகாட்டுநெறிகளை வகுத்தமைத்து வர்த்தமானியில் வெளியிடலாம்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

33 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

34 ஆம் வாசகம்

33 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"முறைமையொன்றாக இருக்கக்கூடியதான திரட்டு நிதியத்தின் அரசிறை மற்றும் செலவினத்தைப் பேணுவதற்கு திறைசேரி ஒற்றைக்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

35 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

36 ஆம் வாசகம்

34 ஆம் பக்கத்தில் 24 மற்றும் 25 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"விதித்துரைக்கப்பட்டவாறு காலகாலமாக மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படுவதன் மூலம் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

37 ஆம் வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

38 ஆம் வாசகம்

36 ஆம் 5 முதல் 11 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

39 ஆம் வாசகம்

36 ஆம் பக்கத்தில் 16 மற்றும் 17 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"கண்காணித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கருமங்களுக்கு வேறு ஏதேனும் எழுத்திலான சட்டங்கள் ஏற்பாடு செய்யப்படாதவை தொடர்பில் நியதிச்சட்ட நிதியங்கள் பற்றிய பணிப்புரைகளையும் வழங்கலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

40 முதல் 46 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

47 ஆம் வாசகம்

47 ஆம் பக்கத்தில் 12 முதல் 14 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"செலவுத்திட்ட உருவகத்தினாலும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், ஒவ்வொரு வரவுசெலவுத்திட்ட உருவகத்தின் கணக்குகள் எல்லா அவசியமான தகவல்களைப் பிரதிபலித்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

48 முதல் 53 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

54 ஆம் வாசகம்

59 ஆம் பக்கத்தில் 28 மற்றும் 29 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"இழப்பு ஏற்படுமிடத்து, அத்தகைய இழப்பு பொறுப்பாகவுள்ள அலுவலர் அல்லது அலுவலர்களிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும் -";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

55 முதல் 59 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

60 ஆம் வாசகம்

63 ஆம் பக்கத்தில் 21 முதல் 30 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"60. (1) (அ) ஏற்புடைமையாகுமிடத்து, திறைசேரிச் செயலாளருடனான கலந்தாலோசனையின்பேரில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உரிய ஆளும் குழுக்களினால் ஆக்கப்படும் பங்கிலாபக் கொள்கையொன்று இருத்தல் வேண்டும்.

(ஆ) நிதி அமைச்சர் ஏற்புடமையாகுமிடத்து, அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின்மீது அறவீடொன்றை விதிக்கலாமென்பதுடன் அத்தகைய அறவீட்டின் விதிப்பனவிலிருந்து அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்றை விலக்களிக்கலாம். அத்தகைய அறவீடு 53 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆண்டறிக்கையில் வெளியிடப்படுதலும் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

61 மற்றும் 62 ஆம் வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

63 ஆம் வாசகம்

66 ஆம் பக்கத்தில் 7 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமையவும் ஊழியர் கோப்பு தொடர்பிலான நிதி அமைச்சரின்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

64 முதல் 67 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

68 ஆம் வாசகம்

70 ஆம் பக்கத்தில் 1 முதல் 3 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"68. (1) திறைசேரிச் செயலாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்கு அவசியமென கருதக்கூடியவாறான 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்க உருவகங்கள் மற்றும் ஆட்களுக்கு பணிப்புரைகளை வழங்கலாம்";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

69 ஆம் வாசகம்

70 ஆம் பக்கத்தில் 7 முதல் 19 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

70 ஆம் வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

71 ஆம் வாசகம்

74 ஆம் பக்கத்தில் 15 முதல் 19 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

79 ஆம் பக்கத்தில் 18 முதல் 22 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“இலங்கை மத்திய வங்கி தவிர -”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

72 ஆம் வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**8. பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 1 முதல் 3 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

1. (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பொருளாதார நிலைமாற்றச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) பாகம் II, பாகம் III மற்றும் பிரிவு 194 என்பவற்றின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எத்தேதியன்று சபாநாயகரின் சான்றிதழ் அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டம் தொடர்பில் புறக்குறிப்பிடப்படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) பாகம் II, பாகம் III மற்றும் பிரிவு 194 என்பவற்றின் ஏற்பாடுகள் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் சபாநாயகரின் சான்றிதழ் தேதியிலிருந்து மூன்று மாதத்தினுள் ஒரு தேதியாகவிருக்கவேண்டிய வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 17 ஆம் மற்றும் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அரசாங்கத்தின் ஆண்டு கடன் சேவையானது வெளிநாட்டு நாணயத்தில் நான்கு தசம் ஐந்தை";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 முதல் 7 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

8 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“பாராளுமன்றம், அரசியலமைப்பின் 43 மற்றும் 148”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 முதல் 12 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

13 ஆம் வாசகம்

13 ஆம் பக்கத்தில் 23 முதல் 30 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் பக்கத்தில் 1 முதல் 19 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 ஆம் பக்கத்தில் 28 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(ஞ) பங்குகள், பங்குத்தொகுதிகள் அல்லது தொகுதிக்கடன்கள், மற்றும் அதையொத்த சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல்;”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 ஆம் வாசகம்

19 ஆம் பக்கத்தில் 14 தொடக்கம் 25 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(2) முதலீட்டு வலயம் முழுவதும் அல்லது அதன் பாகம் தனியார் காணியாகவுள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல் அத்தகைய தனியார் காணி தொடர்பில் (450 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ்

வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய தனியார் காணி தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, ஏதேனும் அத்தகைய அரச காணி அத்தகைய முதலீட்டு வலயத்தினுள் தாபிக்கப்பட்ட அபிவிருத்தியாளர், தொழிற்படுத்துநர்கள் அல்லது தொழில்முயற்சியாளர்கள் வேறு ஆட்கள் குழாம் தவிர்ந்த தனிப்பட்ட பயன்பாட்டிற்கென பராதீனப்படுத்தப்படுதல் ஆகாது என்ற நிபந்தனைகளுக்கமைவாக, இலங்கை வலயங்களுக்கு ஏதேனும் முதலீட்டு வலயத்தினுள் ஏதேனும் அரச காணியின் அளிப்பொன்றை அல்லது வேறேதேனும் பராதீனப்படுத்தல் அல்லது கைதுறப்பொன்றை ஆக்கலாம் அல்லது நிறைவேற்றலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட அளிப்பு அல்லது கைதுறப்பு அல்லது பராதீனப்படுத்தலொன்றின்மீது இலங்கை வலயங்கள், அதில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக, அத்தகைய காணியின் பயன்பாட்டிற்கென பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 9 முதல் 14 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 முதல் 25 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

26 ஆம் வாசகம்

29 ஆம் பக்கத்தில் 22 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதி நியமிக்கப்பட வேண்டிய ஆளின் தகைமைகளும் அனுபவமும் மற்றும் பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதியின் தொழில் நியதிநிபந்தனைகளும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

27 முதல் 31 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

32 ஆம் வாசகம்

36 ஆம் பக்கத்தில் 25 மற்றும் 26 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அமைச்சரவைக்கு விதப்புரை செய்து அதனை சனாதிபதி மற்றும் அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

33 முதல் 36 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

37 ஆம் வாசகம்

39 ஆம் பக்கத்தில் 25 மற்றும் 26 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஏற்பாடுகள் போன்ற உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட சாதகமான விடயங்களை விட எத்தகைய குறைவான நடத்து";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

38 முதல் 44 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

45 ஆம் வாசகம்

48 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"45. முதலீடுகளுக்கு அவ்வப்போது அனுமதிப்பதற்காக";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

49 ஆம் பக்கத்தில் 3 ஆம் மற்றும் 4 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"விலக்களித்தல்கள் ஆகியவற்றுக்கு அத்தகைய முதலீடுகள் தகுதியுடையனவாகக் காணப்படுகின்றன.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

46 ஆம் வாசகம்

50 ஆம் பக்கத்தில் 17 முதல் 27 வரையான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(5) குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்று (1) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி விசாரணை அல்லது வேண்டுகோளொன்றுக்கு பதிலளிப்பதற்கு மறுக்குமிடத்து, புறக்கணிக்குமிடத்து அல்லது தவறுமிடத்து, பொருளாதார ஆணைக்குழு தோதானதெனக் கருதின், அத்தகைய மறுப்பை, புறக்கணிப்பை அல்லது தவறுகையை அமைச்சருக்கு உடனடுத்து ஆற்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அவர் இரு வாரங்களினுள் தோதான நடவடிக்கைக்கென அமைச்சரவைக்கு அக்கருமத்தை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

47 ஆம் வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

48 ஆம் வாசகம்

51 ஆம் பக்கத்தில் 18 ஆம் மற்றும் 19 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"என அழைக்கப்படும்). இது பொருளாதார ஆணைக்குழு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

49 முதல் 52 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

53 ஆம் வாசகம்

55 ஆம் பக்கத்தில் 16 ஆம் மற்றும் 17 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆணைக்குழுவின் ஊழியர் அல்லது முதலீட்டு இலங்கை சபையின் எவரேனும் உறுப்பினர் ஆகியோருக்கு எதிராக எத்தகைய குடியியல்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

54 ஆம் வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

55 ஆம் வாசகம்

56 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"சபையின் கலந்தாலோசனையுடன் இவை தொடர்பான ஒழுங்குவிதிகளை";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

57 ஆம் பக்கத்தில் 24 முதல் 28 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உற்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"தொழில் நியதி, நிபந்தனைக்கு உரித்துடையவர்களாக இருந்தார்களோ அந்த நியதி, நிபந்தனை";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

58 ஆம் பக்கத்தில் 1 மற்றும் 2 ஆம் வரிகளை நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

56 ஆம் வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

57 ஆம் வாசகம்

59 ஆம் பக்கத்தில் 15 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"57. (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

59 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் அது ஆக்கப்பட்டதன் பின்னர் மூன்று மாதங்களுள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தில் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளை அதற்கான பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றதன்மேல் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

58 முதல் 63 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

64 ஆம் வாசகம்

71 ஆம் பக்கத்தில் 13 ஆம் மற்றும் 14 ஆம் வரிகளை நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

65 முதல் 74 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

75 ஆம் வாசகம்

80 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

(2) "இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்பட வேண்டிய ஆளின் தகைமைகளும் அனுபவமும் இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலரின் தொழில் நியதிநிபந்தனைகளும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

76 முதல் 89 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

90 ஆம் வாசகம்

95 ஆம் பக்கத்தில் 16 முதல் 18 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அமைச்சர்கள், அரசாங்க திணைக்களங்கள், நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், ஒழுங்கமைப்பு அதிகாரிகள் அல்லது அமைச்சரின் விதப்புரையுடன் அமைச்சரவையினால் பெயரிடப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

96 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"இருபத்தொரு நாட்களுள் வழங்குதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

96 ஆம் பக்கத்தில் 24 முதல் 32 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(5) குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்று (1) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி விசாரணை அல்லது வேண்டுகோளொன்றுக்கு பதிலளிப்பதற்கு மறுக்குமிடத்து, புறக்கணிக்குமிடத்து அல்லது தவறுமிடத்து, இலங்கை வலயங்கள் தோதானதெனக் கருதின், அத்தகைய மறுப்பை, புறக்கணிப்பை அல்லது தவறுகையை அமைச்சருக்கு உடனடுத்து ஆற்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அவர் இரு வாரங்களினுள் தோதான நடவடிக்கைக்கென அமைச்சரவைக்கு அக்கருமத்தை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

91 முதல் 93 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

94 ஆம் வாசகம்

99 ஆம் பக்கத்தில் 5 ஆம் மற்றும் 8 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"தொழில் நியதி, நிபந்தனைக்கு உரித்துடையவர்களாக இருந்தார்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

95 ஆம் வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

96 ஆம் வாசகம்

100 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"96. (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

100 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் அது ஆக்கப்பட்டதன் பின்னர் மூன்று மாதங்களுள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தில் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளை அதற்கான பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றதன்மேல் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

97 முதல் 146 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

147 ஆம் வாசகம்

143 ஆம் பக்கத்தில் 27 ஆம் மற்றும் 28 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"களும் அனுபவமும் மற்றும் நிறைவேற்று பணிப்பாளரின் தொழில் நியதிநிபந்தனைகளும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

148 முதல் 174 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

175 ஆம் வாசகம்

167 ஆம் பக்கத்தில் 32 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டிய ஆளின் தகைமைகளும் அனுபவமும் பணிப்பாளரின் தொழில் நியதிநிபந்தனைகளும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

176 முதல் 191 வரையான வாசகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

192 ஆம் வாசகம்

178 ஆம் பக்கத்தில் 23 தொடக்கம் 32 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

179 ஆம் பக்கத்தில் 1 தொடக்கம் 10 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

193 ஆம் வாசகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

194 ஆம் வாசகம்

181 ஆம் பக்கத்தில் 26 மற்றும் 27 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

182 ஆம் பக்கத்தில் 5 ஆம் மற்றும் 6 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“ஏற்பாடுகளின் படி, இந்தச் சட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற திகதியிலிருந்து செல்லு”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

183 ஆம் பக்கத்தில் 28 மற்றும் 29 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(ii) இந்தச் சட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற திகதியிலிருந்து செல்லுபடியாகும் விதத்தில் காணப்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

185 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரி தொடக்கம் 36 ஆம் வரி வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(க) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற -

(i) இ.மு.ச வின் அலுவலர்களும் ஊழியர்களும் எந்தத் தொழில் நியதிநிபந்தனைகள் அவர்களுக்கு உரித்ததுடையதாகவிருந்ததோ அந்தத்தொழில் நியதிநிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறையாத நியதிநிபந்தனைகள் மீது பொருளாதார ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) உரிமமளிக்கப்பட்ட வலயங்களுடன் இணைக்கப்பட்ட இ.மு.ச வின் அலுவலர்களும் மற்றும் ஊழியர்களும் எந்தத் தொழில் நியதிநிபந்தனைகளுக்கு அவர்களுக்கு உரித்துடையதாகவிருந்ததோ அந்தத் தொழில் நியதிநிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறையாத நியதிநிபந்தனைகள் மீது இலங்கை வலயங்களின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், இ.மு.ச வின் சேவையாற்றிய ஊழியரொருவருக்கு செலுத்தப்படற்பாலதான நியதிச்சட்ட கொடுப்பனவுகளை கணிப்பீடு செய்கின்றபோது அவ்வூழியர் இ.மு.ச வில் சேவையாற்றிய காலப்பகுதி கருத்திலெடுக்கப்படுதல் வேண்டும்.

(ங) பொருளாதார ஆணைக்குழு அல்லது இலங்கை வலயங்களின் சேவையில் இணைய விருப்பத்தை தெரிவிக்காத இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற இ.மு.ச வில் பதவி வகிக்கின்ற ஊழியர்களும் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான தன்னிச்சையான இளைப்பாறல் திட்டமொன்றின் நியதிகளின்படி அத்தகைய நட்டவீடு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய தன்னிச்சையான இளைப்பாறல் திட்டம் இச்சட்டம் தொடங்கும் தேதியின் பின்னர் ஒரு மாதத்திற்கு மேற்படாத தேதியொன்றில் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன் (க) என்னும் பந்தியின்கீழ் பொருளாதார ஆணைக்குழு இலங்கை வலயங்களில் அலுவலர் அல்லது ஊழியர் ஒருவராக இருப்பதாக கருதப்பட்ட அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும் தன்னிச்சையான இளைப்பாறல் திட்டத்தின் வெளியீட்டுத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அவரது விருப்பத்தெரிவை அறிவித்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

186 ஆம் பக்கத்தில் 1 ஆம் மற்றும் 14 ஆம் வரிகளை நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

186 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரி தொடக்கம் 21 ஆம் வரி வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பொருளாதார ஆணைக்குழு அல்லது இலங்கை வலயங்கள் எதுவாக இருந்த பொழுதிலும் இ.மு.ச. தொடர்பிலும் மற்றும் அதிகாரப் பிரதேசம், உரிமம் பெற்ற வலயங்கள், உரிமம் பெற்ற தொழில்முயற்சிகள், பிரதேச நிறுவனங்கள், நீக்கப்பட்ட";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

195 ஆம் வாசகம்

187 ஆம் பக்கத்தில் 17 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

" 'பிரதேச தொழில்முயற்சி' என்பது நீக்கப்பட்ட சட்டத்தின்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

187 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"இ.மு.ச." என்பது நீக்கப்பட்ட சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டு சபை என பொருள்படும்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

188 ஆம் பக்கத்தில் 3 தொடக்கம் 5 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

188 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"II ஆம், III ஆம் மற்றும் இப்பாகத்தின் நோக்கங்களுக்கு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

196 ஆம் வாசகம்

188 ஆம் பக்கத்தில் 24 ஆம் மற்றும் 26 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"196. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்க உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**9. ஒத்திவைப்பு :** அப்போது பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே பி.ப. 5.52 மணிக்கு இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பிரதிச் சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2024 யூலை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.